# நூறாண்டுக் கோரிக்கையான 'நந்தன் கால்வாய் திட்டத்தை' அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## கல்லணையைக் கட்டிய கரிகாலன் போல்

# முதல்வர் மு.க.ஸ்டாலினும் வரலாற்றில் நிலைத்து நிற்பார்!

### சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் அன்னியூர் சிவா பேச்சு!

**சென்னை, மார்ச் 26-
சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசிய விக்கிரவாண்டி தொகுதி கழக உறுப்பினர் அன்னியூர் சிவா, "விக்கிரவாண்டி தொகுதியில் 'பெஞ்சால்' புயலால் சேதமடைந்த 35 ஏரிகளைச் சீரமைத்திட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

**மேலும் அவர் தமது உரையில், "நூறாண்டுக் கோரிக்கையாக இருந்து வந்த 'நந்தன் கால்வாய் திட்டத்தை' அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி!" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தனது மானியக் கோரிக்கையினை இந்த மாபெரும் அவையில் விவாதத்திற்காக சமர்ப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் எனது தலையாய வணக்கத்தையும், மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்"**

என்ற தமிழ் மூதாட்டி அவ்வையாரின் வரிகளுக்கேற்ப, வேளாண்மைக்கு ஆதாரமாக விளங்கும் நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், எனக்கு இந்த அவையில் பேச வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வருங்காலத் தமிழகத்தை வழிநடத்த இருக்கின்ற எங்கள் மூன்றாம் கலைஞர் அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) "நீரின்றி அமையாது உலகு" என்ற அய்யன் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அந்த வரிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நீர்வளத் துறைக்கு ஒரு பொறுப்பான நீண்ட நெடிய அனுபவம் கொண்ட, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆறுகளையும், கால்வாய்களையும், அணைகளின் பெயர்களையும், விரல்நுனியில் வைத்திருக்கும், எங்கள் பொதுச் செயலாளர் அவை முன்னவர் அய்யா துரைமுருகன் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தின் விடிவெள்ளி, வனத் துறை அமைச்சர் பேராசிரியர் க.பொன்முடி அவர்களுக்கும், அமைச்சர் பணி கடுமையாக இருந்தாலும், இன்றளவும் இயற்கை விவசாயத்தை நேசித்து, அதை சுவாசமாக செய்து வருகின்ற கழகத்தின் முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், எங்கள் மரியாதைக்குரிய கே.என். நேரு அவர்களுக்கும், என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, என்னை வாக்களித்து வெற்றி பெறச் செய்து இந்த அவைக்கு அனுப்பிய விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும் என்றென்றும் நான் நன்றிக் கடன்பட்டவனாக இருப்பேன் எனத் தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

வேளாண் விவசாயத்திற்கு இன்றியமையாத் தேவை நீராதாரம் என்ற அடிப்படையில் நீர்வளத் துறைக்காக 9 ஆயிரத்து 460 கோடி ரூபாய் தொகையை கடும் நிதி நெருக்கடியிலும் அத்துறைக்கு ஒதுக்கீடு செய்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், நிதி ஆதாரங்களைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, நிதி மேலாண்மை செய்து வருகிற நம்முடைய நிதி ஆதாரங்களைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, நிதி மேலாண்மைச் செய்து வருகிற நமது நிதித் துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், I.A.S., அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நீரின்றி அமையாது உலகு.
நிச்சயம் அப்படியே அமையட்டும் - ஆனால்
செருக்களத்து நீராம் செந்நீரும்
உருக்குலைந்த ஏழையின் கண்ணீரும்-அல்லாத
நீர் இன்றி அமையா உலகு."

-என அப்பாடல் அமையட்டும் என்று நல்லாட்சி தந்த நாயகராகவும், நற்றமிழ் வளர்த்த புரவலராகவும், சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை வரிகளை சுவாசித்து, இங்கு எனது உரையை இனிதே துவங்குகிறேன்.



**பல முன்னோடித்திட்டங்கள்!**

தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வழங்கிய ஆட்சியை அவர்களுக்கான ஆட்சியாக நாம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன், நமது திராவிட மாடல் அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் நமது திராவிட மாடல் அரசு செயலாற்றிவரும் நிலையில், அதற்கு மேலும் சிகரம் வைத்தாற்போல், சென்னை மக்களின் தாகம் தீர்ப்பதற்காக 4,375 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 16 டி.எம்.சி. கொள்ளளவில் ஆண்டுக்கு 2.25 டி.எம்.சி. அளவிற்கு வெள்ள நீரை சேமிக்கும் வகையில், சென்னையில் ஆறாவது நீர்த்தேக்கமாக புதிய நீர்த்தேக்கம் ஒன்று 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழநாட்டில் முதலமைச்சராக வீற்றிருக்கும் எங்கள் உயிரனைய தங்கத் தளபதி, கழகத் தலைவர், அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல், அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கும் எங்கள் திராவிட மாடல் நாயகர், முதலமைச்சர் விளங்குகிறார்கள்.

அன்று கல்லணையைக் கட்டினார், கரிகாலன் என்பதைப்போல், இன்று சென்னையில் அமையவுள்ள ஆறாவது நீர்த்தேக்கத்தை நிறுவினார் என்று வரலாற்றில் இடம் பெறப்போகும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மக்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் போற்றி வணங்கி, முக்கியத்துவம் வாய்ந்த எனது கோரிக்கைகளை இங்கு எடுத்துவைக்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் மழைக்காலங்களில் நிரம்பி வழியும் 5.87 டி.எம்.சி. அளவுள்ள உபரி நீரை ஊட்டுக்கால்வாய் அமைத்து, திருவண்ணாமலை மாவட்டத்தில் 2,610 ஏக்கர் மற்றும் நந்தன்கால்வாய்மூலம் 6,654 ஏக்கர் ஆய்க்கட்டுகள் பாசன வசதி பெற ஏறத்தாழ 286 ஏக்கர் பட்டா நிலத்தையும், 53.92 ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும் மற்றும் 36 ஏக்கர் வனத் துறை நிலத்தையும் கையகப்படுத்தி, இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தினால், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 33 கிராமங்களில் உள்ள விவசாயிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 24 கிராமங்களில் உள்ள விவசாயிகளும் பயன்பெறுவார்கள்.

ஏறத்தாழ நூறாண்டுகால விவசாயிகளின் கோரிக்கையை இந்த மன்றத்தில் 1952 ஆம் ஆண்டிலிருந்து 65 ஆண்டுகாலமாக, ஒவ்வோராண்டும் நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கையின்போதும் வைக்கப்படுகின்ற இந்தக் கோரிக்கையை, இந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 28.1.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகைதந்தபோது, 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, இரண்டு மாவட்ட விவசாயிகளின் சார்பாக, எனது சிரம் தாழ்ந்த நன்றிகளை முதலமைச்சர் அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

அடுத்ததாக, நந்தன் கால்வாய் முடியும் பனமலை ஹீசா பெரிய ஏரியின் கரையைப் பலப்படுத்தி, நீர்த்தேக்கமாக மாற்றித் தர வேண்டுமென்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**புதிய அணைக் கட்டை கட்டித் தந்த முதல்வருக்கு நன்றி!**

அடுத்ததாக, விழுப்புரம் மாவட்டத்தில், திருக்கோவிலூர் தொகுதியில் கடந்த ஆண்டு பெய்த கடும் பெருமழையால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட எல்லீஸ் அணைக் கட்டை 89 கோடி ரூபாய் செலவில், 15,000 ஏக்கர் பாசன வசதி பெறுவதற்கு ஏற்றவாறு புதிதாகக் கட்டித் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சாத்தனூர் அணையிலிருந்து விழுப்புரம் மாவட்டத்தின் வழியாக புதுச்சேரி நோக்கிச் செல்லும் தென்பெண்ணையாற்றில், 67 வாய்க்கால்கள் உள்ளன. இதன்மூலம் 7,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்கால்களில் உள்ள தலைப்பு மதகுகளைச் சீரமைத்து மழைக்காலங்களில் கிராமங்களுக்குள் வெள்ள நீர் புகாத வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்திலும், புதிய பேருந்து நிலையத்திலும், மழைக்காலங்களில் அதிக அளவில் நீர் தேங்குகிறது. இதனைத் தடுக்கும்பொருட்டு, வழுதரெட்டி ஏரியின் உபரி நீரையும், மழை நீரையும், சாலாமேடு அய்யனார் ஏரிக்குச் செல்லும் வரத்துக் வாய்க்காலைச் சீரமைத்து, அதன் உபரி நீரோடு சாலாமேடு ஏரிக்குத் திருப்பினால், விழுப்புரம் நகரப் பேருந்து நிலையத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் மழைநீர் தேங்காமல் இருக்கும் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று இந்த அவையில் எனது கோரிக்கையைப் பதிவு செய்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியில், கடந்த டிசம்பர் மாதம் பெஞ்சல் புயலால் வரலாறு காணாத தொடர்மழை பெய்து, பம்பை வாய்க்காலின் அருகில் உள்ள 15க்கும் மேற்பட்ட ஏரிகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டதால், பம்பை வாய்க்காலின் கொள்ளளவிற்கு அதிகமான வெள்ளநீர் வந்ததால், சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு கரைகள் மற்றும் குறுக்கே உள்ள காங்கேயனூர் அணைக் கட்டு, அகரம் சித்தாமூர் அணைக் கட்டு, திருவாமாத்தூர் அணைக் கட்டு, செம்போடை அணைக்கட்டு ஆகியவற்றில் சேதம் ஏற்பட்டது. அதனை இந்த ஆண்டே நிவர்த்தி செய்ய உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள 35 ஏரிகளின் கரைகள் உடைந்தும், மதகுகள் உடைந்தும் வெள்ளநீரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த ஏரிகளையும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து, இந்த ஆண்டு சீர்செய்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கடந்த டிசம்பர் மாதம் பெஞ்சல் காரணமாக விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கடுமையான சேதம் ஏற்பட்டது. இந்தப் புயலில் பெண்ணையாறு வடிநிலப்பகுதிகளில் உள்ள 247 ஏரிகள், முக்கிய அணைக்கட்டுகள், பாசன வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. அவை தற்போது தற்காலிகமாக சீரமைக்கப்ப ட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட இந்த ஏரிகளின் நிரந்தர சீரமைப்பிற்கு உரிய நிதியை ஒதுக்கி, ஆவன செய்ய வேண்டும் என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**பாவேந்தருக்கு மணிமண்டபம்!**

கனிமவளத் துறையின் சார்பாக விவசாய நிலங்களுக்கு ஏரிகளிலே மண் எடுப்பதற்காக 75 கனமீட்டருக்கு மட்டும் இப்போது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன். நீர்வளம் மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் அவர்கள் அந்த 75 கனமீட்டர் என்பதை உயர்த்தித்தர வேண்டும் என்று தமிழக விவசாயிகளின் சார்பாக நான் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழுக்கும் அமுதென்றுபேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்குநேர்" என்ற தேன் சுவை சொட்டும் பாடல் வரிகளுக்கு சொந்தக்காரரும், தமிழ்மொழிக்கு அருந்தொண்டாற்றியவரும், திராவிட இயக்கக் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தவருமான 'பாவேந்தர் பாரதிதாசன்' அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டைப் போற்றும்வகையில், அவர் பிறந்த புதுச்சேரிக்கு அருகிலுள்ள விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியில் அவருக்கு ஒரு மணிமண்டபம் அமைத்துத் தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்புவியில் பிறக்கும் ஒவ்வொருவரும் அறியாமை என்னும் இருள் நீங்கி வாழ வேண்டுமாயின் (மணியடிக்கப்பெற்றது) அவர்களுள் கல்வி என்னும் விளக்கு ஏற்றப்பட வேண்டும் என்பதை உணர்ந்த நமது முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். அந்தவகையில், முதலமைச்சர் அவர்கள், விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட மேல்கரணை, கஞ்சனூர் ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகள், விக்கிரவாண்டி மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்று உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்றும், அதேபோன்று, கோழிப்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்றும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**சிப்காட் தொழிற்பேட்டை!**

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், பெஞ்சல் புயலால் ஏற்பட்ட கனமழை காரணமாக விக்கிரவாண்டித் தொகுதிக்குட்பட்ட 119 கிராமங்களில் உள்ள ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த சாலைகள் மிகவும் பழுதடைந்து, சிதிலமடைந்து காணப்படுகின்றன. அந்தச் சாலைகளைப் புனரமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு முக்கியமான கோரிக்கையை எனது தொகுதியின் சார்பாக இந்த அவையில் வைக்கிறேன். எனது தொகுதி பொருளாதார ரீதியாக, மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் பகுதி. இப்பகுதியில் பெண்களின் பொருளாதாரம் உயரவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையிலும், சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தொழிற்பூங்கா ஒன்றைத் தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மக்கள்நலன் காக்கும் திராவிட மாடல் அரசில், கல்பட்டு, திருவாமாத்தூர் ஆகிய இடங்களுக்கு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களும், வேம்பி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவும் உருவாக்கிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நந்தன் கால்வாயைப் பொறுத்தவரையிலும் தென்பெண்ணையாற்றின் கீழ் இருக்கின்ற வடிகால் நிலங்களைப் பொறுத்தவரையிலும், நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனைத்து வாய்க்கால்களும் அத்துப்படியாக இருக்கின்ற காரணத்தால் அந்த தென்பெண்ணை ஆற்றின் கரையிலுள்ள head gullies மற்றும் shutter களை உடனடியாக பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை நான் இந்த அவையிலே மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த அவையில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மற்றுமுள்ள தோழமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# புதுச்சேரியில் உள்ளாட்சித் தேர்தலை உடனே நடத்த அரசு முன்வரவேண்டும்!

## மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வலியுறுத்தல்

*புதுச்சேரி, மார்ச் 26-
மானிய கோரிக்கை மீது புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா ஆற்றிய உரை வருமாறு: -*

*புதுச்சேரி மாநிலத்திற்கு நீண்ட கால அனுபவம் பெற்றவர் துணைநிலை ஆளுநராக இருக்கிறார். அவருடைய அனுபவத்தை வைத்து பல்வேறு துறைகளில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். சமீபத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட சிறப்புக்கூறு நிதி ரூ. 500 கோடி அளவில் நிதி எப்படி கையாளப்பட்டிருக்கிறது என்பது குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உள்ளார். ஆனால் அந்த ஆய்வில் அவர் கண்டுபிடித்த குறைகள் என்ன?. அவைகள் நிவர்த்தி செய்யப்பட்டனவா என்பது குறித்து இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டும்.*

*இந்த அரசு அமைக்கப்பட்டதிலிருந்து சிறப்பு நிதி, ஒன்றிய திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்களான விமான நிலைய விரிவாக்கம் - ரூ. 1825 கோடி, புதிய சட்டமன்றம் ரூ. 480 கோடி, சுகாதாரத்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ. 500 கோடி, மருத்துவ பல்கலைக்கழகம் அமைக்க ரூ. 300, தேசிய பல்கலைக்கழகம் அமைக்க ரூ. 453 கோடி என மொத்தம் ரூ. 5,828 கோடி சிறப்பு நிதியை மாநிலத்தின் தலைமை நிர்வாகி என்ற முறையில் துணைநிலை ஆளுநர் ஒன்றிய அரசை நேரில் அணுகி இத்திட்டங்களை பெற்று வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*மூடப்பட்ட பாசிக், பாப்ஸ்கோ, அமுதசுரபி, ஸ்பின்கோ போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் வேலை இழந்த தொழிலாளர்களின் நிலையை ஆய்வு செய்து அவர்களுக்கு சேர வேண்டிய பணிக்கொடை போன்றவைகள் முறையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பளம் உள்ளிட்ட பணிக்கொடை கிடைக்காத விரக்தியில் பாசிக் ஊழியர் ஒருவர் நிறுவன வாசலில் பெட்ரோல் ஊற்றி எரித்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார். அந்த குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும்.*

*புதுச்சேரியில் நீண்ட காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உள்ளாட்சி நிர்வாகிகள் தடைபடுத்தப்படுவதுடன், நகர் மற்றும் கிராமங்களின் வளர்ச்சிப் பணியும் தடைபடுகிறது. உள்ளாட்சித் தேர்தலில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முறையான இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் வழக்கு மன்றம் சென்று தீர்ப்பு பெற்றோம். அந்த அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிகளை ஒன்றிணைத்து மாநகராட்சியாக மாற்றி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*செய்தியாளர் மன்றத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். பத்திரிகையாளர்களுக்கு மனைப் பட்டா, அடையாள அட்டை, லேப்-டாப், பஸ் பாஸ் கொடுக்க வேண்டும். புற்றீசல் போல் உருவெடுத்து வரும் வெப் டிவி, யூடியூப் சேனல் ஆகியவற்றை முறைப்படுத்த வேண்டும்.*

*அரசுத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச கூலியை கொடுக்க வேண்டும். அங்கன்வாடியில் முறைப்படி பணியமர்த்தப்பட்ட 200 ஊழியர்கள் பல்வேறு அரசுப் பணிகளுக்கு பயன்படுத்த படுபவர்களுக்கு ரூ. 6 ஆயிரம், உதவியாளருக்கு ரூ. 4.500 வழங்குவது எந்த*



*விதத்தில் நியாயம். சட்டமன்றத்தில் உயர்த்தி அறிவித்த சம்பளத்தை கூட தர மறுக்கிறீர்கள். இந்த ஆண்டு தருவீர்கள் என்று நம்புகிறேன்.*

*அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களில் நிரப்ப வேண்டிய 2 ஆயிரம் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்றிய அரசு 1992-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை புதுச்சேரிக்கு வழங்க வேண்டிய நுழைவு வரி பாக்கி ரூ. 118 கோடியை பெறுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும். கேபிள் டிவி கட்டணம் தமிழ்நாட்டில் உள்ளது போல் புதுச்சேரியில் நிர்ணயம் செய்து முறையாக வசூல் செய்யாமல் ஒரு இணைப்புக்கு வெறும் ரூ. 8 வசூலிக்க உத்தரவிட்டது யார்?. தனியார் கொள்ளையடிக்க அரசு துணை போகிறது?. இதன் மூலம் அரசுக்கு ரூ. 150 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசே இந்த வருமான இழப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளாட்சித் துறை எப்படி தன்னிச்சையாக செயல்பட முடியும்.*

*பல வருடங்களாக சர்வதேச மற்றும் தேசியப் போட்டியில் பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை உடனடியாக வழங்க வேண்டும். விளையாட்டு கவுன்சிலில் நடைபெற்ற பல கோடி ரூபாய் மோசடி விவகாரத்தை சிபிஐ விசாரணைக்கு உட்படுத்தி, அந்த பணத்தை மீட்க வேண்டும். சேதராப்பட்டில் உள்ள 800 ஏக்கர் அரசு நிலத்தில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கி புனே, பெங்களூர் மற்றும் ராஞ்சியில் உள்ளதை போல் சர்வதேச தரத்துடன் கூடிய அனைத்து விளையாட்டு அரங்கங்கள் உள்ள விளையாட்டு கிராமத்தை ஏற்படுத்த வேண்டும். விளையாட்டு ஆசிரியர் பணியிடம் நிரப்ப வேண்டும்.*

*நாடு முழுவதும் மின் விநியோக நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த ஒன்றிய மின்துறை அமைச்சகம் புதுச்சேரி மின் துறைக்கு 'ஏ' கிரேடு அந்தஸ்தை கொடுத்துள்ளது. அப்படிப்பட்ட நிலையில் ஏன் தனியார் மயம் என்பது தான் மக்களின் எண்ணமாக உள்ளது. மின்நுகர்வோர் வைப்பு நிதி பலகோடி இருக்கும்போது மாதம்தோறும் புதியதா வைப்பு நிதி வீட்டிற்கு ஒரு கிரோ வாட்டிற்கு ரூ. 35-ம் தொழிற்சாலைகளுக்கு ரூ. 200-ம் வசூலிக்கப்படுவது ஏன்?. அந்த நிதி எங்கே செல்கிறது என்பது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும். ப்ரீபெய்டு மின் மீட்டரை அரசு கட்டாயம் வழங்கும் என்றால் அரசே தரமான ப்ரீபெய்டு மீட்டரை பொருத்த வேண்டும். நுகர்வோர்களிடம் அதற்கான கட்டணத்தை வசூலிக்கக் கூடாது.*

*மீனவர்கள் பிரச்சினையில் ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களுக்கு ஒரு மாதிரியாகவும், தமிழ்நாடு, காரைக்காலுக்கு ஒரு மாதிரியுமான நிலையை எடுக்கிறது. இது மீனவர்களின் வாழ்வாதார பிரச்னை. புதுச்சேரி அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்வு காண வேண்டும்.*

*பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 2004 முதல் இடஒதுக்கீடு அளிக்கப்படுவதற்கு முன்பாக ஆர்.வீ. ஜானகிராமன் முதல்வராக இருந்த போது தங்கமணி தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்து அந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி தான் அந்த இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. ஆனால் தற்பொழுது பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்வகுப்பு சாதியினருக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு என்பது எந்தவித தரவுகள் இன்றி வழங்கப்பட்டுள்ளது. வெறும் 1.5 சதவீதம் உள்ள மக்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு அளிப்பது எவ்வளவு பெரிய மோசடி திட்டம் என்பதையும், சமூக அநீதி என்பதையும் இந்த அரசு உணர வேண்டும். சிறுபான்மையினர் மாணவர்களுக்கான கல்விக் கடனை ரத்து செய்வதாக 2021ஆம் ஆண்டு முதல்வர் அறிவித்தார். ஆனால் அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிதாக இஸ்லாம் மதம் தழுவியவர்களுக்கு தமிழ்நாட்டைப்போல் பிசி எம் அந்தஸ்து வழங்க வேண்டும். மகளிர் உரிமைத் தொகை பெறும் திட்டம், முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்து காத்திருக்கும் சுமார் 18 ஆயிரம் பெண்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*அரிக்கன்மேடு வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். தமிழகத்தில் கீழடி அகழாய்வு மூலம் தான் தமிழர்களின் தொல் நாகரீகம் இன்றைக்கு வெளிக் கொணரப்பட்டு இருக்கிறது. கீழடி போன்று பெருமை மிக்கதுதான் அரிக்கன்மேடு. ஆகவே, அரிக்கன்மேட்டில் அகழாய்வு மேற்கொள்ள ஒன்றிய அரசை வற்புறுத்த புதுச்சேரி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊசுட்டேரியை சுற்றுலா வளர்ச்சிக் கேந்திரமாக மாற்ற வேண்டும். தீம் பார்க், ஏற்படுத்த வேண்டும். எம்ஜிஎம் போன்ற தனியார் நிறுவனங்கள் மூலம் சுற்றுலாவை வளர்த்தெடுக்க வேண்டும். பாகூர் ஏரி, கிருமாம்பாக்கம் ஏரி இவைகளை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும்.*

*வணிக உரிமம் புதுப்பிக்கும் கட்டணத்தை எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தொழில் செய்யும் இடத்தின் அளவின் அடிப்படையில் அளவீடு செய்து சதுர அடியில் கட்டணம் வசூலிக்க உள்ளதை அரசு பரிசீலிக்க வேண்டும்.*

*முன்னாள் பிரதமர் வாஜ்பாய், தமிழ் மொழி, இனத்திற்காக வாழ்ந்த தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர், புதுச்சேரி முன்னாள் முதல்வர்கள் பாரூக் மரைக்காயர், சண்முகம், ராமசாமி, டி. ராமச்சந்திரன், ஆர்.வீ. ஜானகிராமன், முன்னாள் அமைச்சர் கண்ணன் ஆகியோர்க்கு சிலை அமைக்க வேண்டும். இல்லை ஏதாவது முக்கிய இடங்களுக்கு பெயர் வைத்து மரியாதை செய்ய வேண்டும்.*

*இவ்வாறு அவர் உரையாற்றினார்.*



தேனி வடக்கு மாவட்ட தேனி தெற்கு ஒன்றியம் வீரபாண்டி தனியார் மண்டபத்தில் ஒன்றிய செயலாளர் ரத்னா சபாபதி ஏற்பாட்டில் தனியார் மண்டபத்தில் பி எல் 2பாகம் முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன் சிறப்புரையாற்றினார் மற்றும் தெய்வேந்திரன் வீரபாண்டி, செல்வராஜ், கீதாசசி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முருகேசன் எம்.எல்.ஏ., கண்டன உரை நிகழ்த்தினர். கழக சட்டத்துறை இணைச் செயலாளர் பரந்தாமன் எம்.எல்.ஏ., நிலோபர் நிஷா, இன்பா ஏ.என்.ரகு, சுந்தர்ராஜன், சம்பத் ராஜா, சுப.த. திவாகரன், சி.கே. குமரகுரு, சன். சம்பத்குமார், ரமேஷ் கண்ணா, ஆர்.எஸ், சத்தியேந்திரன், ஆர்.கே. கோபிநாத், தவ்ஹீத் ரகுமான், சேது கருணாநிதி, ஜீவரத்தினம் மாவட்ட துணைச் செயலாளர் கே. கருப்பையா,மற்றும் மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் அனைத்து அணி அமைப்பாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில்

# பரமக்குடியில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*பரமக்குடி, மார்ச் 26-
தமிழ்நாட்டில் நான்கு ஆண்டுகளின் செய்த சாதனையை 40 ஆண்டுகளில் யாரும் செய்ய முடியாது தமிழ்நாடு அரசுக்கு முட்டுக் கட்டை போட நினைக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பரமக்குடியில் திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சட்டத்துறை இணைச்செயலாளர் பரந்தாமன் எம்.எல்.ஏ., பேசினார்.*

*இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டப்பேரவை தொகுதி பரமக்குடியில் தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.*

*மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத்ராஜா வரவேற்புரையாற்றினார். மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலை வகித்தனர்*

*இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் சுப.த.திவாகரன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார் சக்தி வாசுதேவன் அண்ணாமலை கதிரவன் குணசேகரன் மற்றும், பொதுக்குழு உறுப்பினர்கள் அருளானந்த், பூமிநாதன், கழக இளம் பேச்சாளர் நிலோபர் நிஷா, மற்றும் கழக சட்டத்துறை இணைச்செயலாளர் பரந்தாமன் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு பேசுகையில்,*

*தமிழகத்தில் திராவிட மாடல் முதல்வர் ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டுகளில் நாம் சாதித்த சாதனையை 40 ஆண்டுகள் யாரும் சாதிக்க முடியாது. இன்று தமிழ்நாட்டில் நிதி நிலை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்திய துணைக்கண்டமே இதே போன்று நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய முடியாத அளவிற்கான நல்ல பெயர் பெற்றுள்ளது.*

*தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசை கண்டித்து பொதுமக்கள் அறிந்திடும் வகையில் இந்த தனித்துவமான பொதுக்கூட்டம் நடத்துகிறோம். இதனை இன்றைய தலைமுறை இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.*

*இந்த பொதுக்கூட்டத்தில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரமேஷ்கண்ணா, சன் சம்பத் குமார், குமரகுரு, சத்தியேந்திரன், கோபிநாத், தௌபிக் ரகுமான் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.*



சிவகங்கை நகர் பேருந்து நிலையம் முன்பாக கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆலோசனையின் பேரில் சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை சிவகங்கை நகர் கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு குளிர்பானங்களை வழங்கினார். இதில் தமிழ் பிரியா, திலகவதி கண்ணன் மற்றும் நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.